விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 055 வள்ளுவர் ஆண்டு 2057 தை 29 வியாழக்கிழமை (12.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

அல்லைப்பிட்டியில் சுடப்பட்ட

## சிறுவனின் இரத்த மாதிரி கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல்லைப் பிட்டிப் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த 17 வயதுச் சிறுவனின் இரத்த மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சிறுவனின் சிறுநீரகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, அவர் போதைப்பொருள் பயன்

15ஆம் பக்கம் பார்க்க

எம்மைப் பின் தொடர்ந்த

## பொலிஸார் வாகனத்தை நோக்கி சூடு நடத்தினர்

ஹயஸ் வாகனத்தில் பயணித்தவர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி நோக்கி ஹயஸ் வாகனத்தை திருப்பியவேளை எம்மைப் பின் தொடர்ந்து வந்த பொலிஸார் வாகனத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர் என ஹயஸ் வாகனத்தில் பயணித்த மற்றைய இருவரும் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## சிறுவனின் இறுதிக்கிரியை இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

அல் லைப் பிட் டியில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட 17 வயதுச் சிறுவனின் இறுதிக் கிரியைகள் வட்டுக்கோட்டையில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க

மாவிட்டபுரத்தில்

## யாழ் ராணி மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

# சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவோம்

ஜனாதிபதி அநுர வலியுறுத்து



(நுவரெலியா)

சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் ஆட்சியை உறுதிப் படுத்துவோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலை

## புத்தர் சிலை விவகாரம்

4 தேரர்கள் உள்ளிட்ட
10 பேரும் பிணையில் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலையில் கரையோர பாதுகாப்புச் சட்டத்தை மீறியமை மற்றும் அத்துமீறிய கட்டுமானம் ஆகிய

15ஆம் பக்கம் பார்க்க

அரகல போராட்டத்தில்

# அமரகீர்த்தி எம்.பி கொலை 12 பேருக்கு மரண தண்டனை

கம்பஹா மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

(கம்பஹா)

அரகல போராட்டத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரி ஆகியோரை தாக்கி கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்

02ஆம் பக்கம் பார்க்க

யாழ்.பல்கலைக்கழகத்தில்

## குமாரபுரம் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல்



15ஆம் பக்கம் பார்க்க

## தேயிலைத் தோட்டத்தில் ஜனாதிபதி...



15ஆம் பக்கம் பார்க்க

பூநகரியில்

## உ/த மாணவன் சடலமாக மீட்பு

(பூநகரி)

பூநகரி செம்மன்குன்றுப் பகுதியில் உயர்தர மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் பூநகரி மத்திய

15ஆம் பக்கம் பார்க்க

இனவாதத்துக்கு இடமில்லை

## கொழும்பை மையப்படுத்தி அரசியல் செய்யப்படாது



யாழில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

இனவாதத்துக்கு என்றுமே இடமில்லை. கொழும்பை மாத்திரம் மையப்படுத்திய அரசியலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவற... ...க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லைப்பிட்டியில் கைதான இருவரும் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற வாகனத்தில் பயணித்த இருவரையும் 25 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையிலும் தலா 2 ஆள் பிணையிலும் செல்ல ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று நேற்று அனுமதித்துள்ளது.

அல்லைப்பிட்டிப் பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த வாகனம் மீது பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ள நிலையில் வாகனத்தில் பயணித்த இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

இந்நிலையில் குறித்த இருவர் சார்பிலும் முன்னிலையான சட்டத்தரணி நேற்றுப் புதன்கிழமை நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கினை மன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்து பிணை விண்ணப்பம் செய்ததனையடுத்து இருவருக்கும் நீதிமன்று பிணை வழங்கியுள்ளது. (ம-7,33)

# அரச சேவையின் கொடுப்பனவுகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்படும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(நுவரெலியா)

அரச சேவையின் கொடுப்பனவுகள் தொடர்பில் சிக்கல்கள் நிலவுவதால், அது குறித்து மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குறுகிய கால அவகாசம் வழங்குமாறும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரச ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முழு நாடுமே ஒன்றாக தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெளிவுபடுத்தினார்.

அங்கு அவர், அரச ஊழியர்களுக்கு திருப்திகரமான வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்கத்தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும் 2027 ஆம் ஆண்டில் மூன்றாவது சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதால், அதன் பின்னர் அரச சேவையின் ஏனைய கொடுப்பனவுகளையும் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

# வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக இன்று முதல் (12) முதல் எதிர்வரும் 14.02.2026 வரை வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, மேற்கு, வடமத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் மிதமான முதல் சற்று பலத்த மழைவீழ்ச்சி கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இன்று இரவு சற்றுக் கனமான மழைவீழ்ச்சி கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இதேவேளை நாளை (13) கிழக்கு, மத்திய, மேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களின் பல பகுதிகளில் பரவலான மழைவீழ்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மீண்டும் வரும் 16 ஆம் தேதிக்குள் வங்காள விரிகுடாவில் காற்று சுழற்சியை உருவாக்க வாய்ப்புள்ளது என்றார். (ம-7)

## சட்டத்தின்...

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற முழுநாடுமே ஒன்றாக தேசிய வேலைத்திட்டத்தின் நிகழ்ச்சியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் 2026 ஆம் ஆண்டு என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை உயிர்ப்பிக்கும் ஆண்டாக மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பிரஜையொருவருக்கு அநீதி நடந்தால் அவர் எங்கு செல்ல வேண்டும். அவர் பொலிஸாரிடம் செல்வார்.

தனக்கு நடந்த அநீதிக்கு அவர் நீதியை எதிர்பார்ப்பார். அவர் நீதிமன்றத்தை நாடுவார்.

அநீதிக்கு நீதியை எதிர்பார்ப்பார். அநீதிக்கு எதிராக நீதியை நிலைநாட்ட சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் இது மிகவும் அத்தியாவசியமானது. எனவே சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவோம்.

சட்டத்தின் ஆட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் உள்ளது. சட்டம் சிலந்திவலையைப் போன்றது என்பார்கள். சிறிய விலங்குகள் சிக்கிக் கொள்ளும் பெரியவை தப்பித்துக் கொள்ளும் என்பார்கள். இவ்வாறு தான் பொதுமக்கள் மத்தியில் சட்டம் தொடர்பான நம்பிக்கை காணப்படுகிறது.

ஆனால் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற வசனத்திற்கு உயிர் கொடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## கொழும்பை...

முன்னெடுக்காது என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை யாழ்.ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதி புனரமைக்கும் வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

எமது அரசாங்கம் இலங்கை முழுவதையும் வடக்குக் கிழக்கை ஒன்றிணைத்தும் அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் செய்து தருவதற்கு முன்வந்துள்ளது.

நாமல் ராஜபக்ஷ, சஜித் பிரேமதாச போன்றோர் சிறு விடயங்களைக் கூட பாரதூரமாகக் குழப்ப முயற்சிக்கின்றனர்.

எனவே மக்கள் எமது ஆட்சியில் சரியான அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியும். அதேபோல இனவாதம் பேசுவதற்கும் நமது ஆட்சியில் இடமளிக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். (ம-7)

## அமரகீர்த்தி...

டப்பட்ட 12 பேருக்கு கம்பஹா மேல் நீதிமன்றம் நேற்று (11) மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

வழக்கு விசாரணை சஹன் மாபா பண்டார, ரஷ்மி சிங்கப்புலி, ரசந்த கொடவெல ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 04 குற்றவாளிகளுக்கு 05 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 06 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரின் பாதுகாப்பு அதிகாரி ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா நட்டஈட்டை வழங்குமாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நட்டஈட்டை செலுத்தத் தவறின் மேலும் 12 மாதங்கள் மேலதிக சிறைத்தண்டனை விதிக்கப்படும் என நீதிபதிகள் குழாம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வழக்கின் ஏனைய 23 சந்தேகநபர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். 2022 மே 09ஆம் திகதி காலிமுகத்திடலில் நடைபெற்ற அமைதிப் போராட்டத்தின் போது பொலநறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தராகச் செயற்பட்ட ஜயந்த குணவர்தன ஆகியோர் மீது நிட்டம்புவ நகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது இருவரும் உயிரிழந்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 41 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் கம்பஹா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சிறுவனின்...

குறித்த சிறுவனின் சடலம் பிரேதப் பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## துயர் பகிர்தல்...

ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை புகுந்த இடமாகவும் கொண்ட எங்கள் தாய்மாமனார்

திரு. சங்கரப்பிள்ளை சிவரத்தினம்

(ஓய்வுநிலை பிரதிக்கணக்காய்வாளர் நாயகம் - இலங்கை)



அவர்கள் 11.02.2026 அன்று அமெரிக்காவில் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து நாம் துயருறுவதுடன் அன்னாரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா அவரது குலதெய்வமான மயிலிட்டி பெரும்பரப்பு பிள்ளையாரின் திருவடிகளில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(0189)

பத்தாவத்தை, இளவாலை.

அன்பு மருமக்கள் குடும்பம்

## விற்பனைக்கு

பாவித்த மர அலுமாரிகள் விற்பனைக்குண்டு.

4'x5' தேக்கு

4'x3½' முதிரை

077 873 0129

யாழ்ப்பாணம்

(5807)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியா- பாகிஸ்தான் கிரிக்கெட் மோதல்
## இலங்கைக்கான வானூர்தி கட்டணங்கள் அதிரடி உயர்வு

**(கொழும்பு) ........................................**
**இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கை வரும் பயணிகளுக்கான வானூர்தி பயணச்சீட்டு விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போட்டிக்கு, பாகிஸ்தான் அணிக்கு அனுமதி வழங்கியதையடுத்து இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

விசேடமாக, இந்தியாவிலிருந்து கொழும்பு வரும் வானூர்திகளுக்கான பயணச்சீட்டு விலை சாதாரண விலையை விட சுமார் மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மும்பை, டில்லி மற்றும் சென்னை போன்ற நகரங்களிலிருந்து கொழும்புக்கு வரும் நேரடி வானூர்திகளின் அனைத்து வகுப்பு பயணச்சீட்டு விலைகளும் சாதாரண விலையை விட அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## தோட்டத் தொழிலாளர்களை நேரில் சந்தித்த ஜனாதிபதி

(ஹற்றன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் காலை நுவரெலியா, நானுஓயா - ரதல்ல வீதியில் பணியாற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை நேரில் சந்தித்து சிநேக பூர்வமாக கலந்துரையாடினார்.

அண்மையில் தமக்கு வழங்கப்பட்ட வேதன உயர்வுக்காக ஜனாதிபதிக்கு அவர்கள் இதன் போது தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். மேலும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதார நிலைமைகள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார். (நி)

## ஜனாதிபதி நிதியத்தினூடாக வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி நிதியத்தின் ஆளுநர் சபை கூடிய போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கட்டணங்களைத் திருத்தம் செய்து அந்த உதவித் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளைப் பெறுவதில் உள்ள கடுமையான நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

அதன்படி, பல்கலைக்கழகக் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு, ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையை ஒரே தடவையில் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவமனைகளில் இதய சத்திர சிகிச்சை மற்றும் கண்புரை சத்திர சிகிச்சைகளுக்காகக் காணப்படும் நீண்ட வரிசைகளைக் குறைப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக உதவி பெறுபவர்களின் விபரங்களை மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் இணையத்தளத்தில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

## விசேட தேவையுடையோருக்கு புதிய நவீன பேருந்துகள்

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்கள், இலகுவாகப் பயன்படுத்தக் கூடிய வசதிகளுடன் கூடிய 10 புதிய நவீன பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி இதற்கான முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, 10 பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 15 ஆம் திகதி குறித்த பேருந்துகள் நாட்டை வந்தடையவுள்ளன.

இந்த புதிய பேருந்துகளில் விசேட தேவையுடையோர் மற்றும் முதியவர்கள் இலகுவாக ஏறி இறங்கும் வசதிக்காக தாழ்வான மிதிபலகை மற்றும் முழுமையான குளிரூட்டப்பட்ட வசதி, டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (நி)


மணிவிழா வாழ்த்துக்கள்,
அன்புத் தமிழாசானே!



திரு.சின்னத்தம்பி சுந்தரமூர்த்தி
B.A, PGDE, M.A(IN TAMIL)

தமிழ் மொழியின் இனிமையை எங்களின்
உள்ளங்களில் விதைத்து,
அறிவையும் பண்பையும்
ஒருங்கே கற்றுத்தந்த
உங்களின் அர்ப்பணிப்பானசேவை
இன்றுடன் 60 ஆவது வயதினில்
மணிவிழா காண்பது பெருமையும்
மகிழ்ச்சியும் அளிக்கிறது.

எண்ணற்ற மாணவர்களின் வாழ்வில்
ஒளியாக விளங்கிய
உங்களின் வழிகாட்டுதல் என்றும்
நினைவில் நிலைத்திருக்கும்.
உடல் நலம், மன நிம்மதி, நீண்ட ஆயுள்
மற்றும் தொடர்ந்த சேவையுடன் வாழ
உளமார்ந்த மணிவிழா வாழ்த்துக்கள்!




சேவை விபரம்

- பட்டதாரி பயிலுனர் நிர்வாக உதவியாளர்
  யா/ வரணி மகா வித்தியாலயம்
  05.10.1994 - 31.03.1997
- ஆசிரியர் - யா/வரணி மத்திய கல்லூரி
  01.04.1997 - 04.09.2011
- ஆசிரியர் - யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
  05.09.2011 - 31.12.2018
- ஆசிரியர் - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
  01.01.2019 - 11.02.2026

(C-4981)

வாழ்த்துவோர் -
2007 A/L மாணவர்கள், யா/வரணி மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசியமட்ட உதைபந்தாட்டப்போட்டி
## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியன்







தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 14 வயதுப் பெண்களுக்கான பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகியது.

சமபோஷா வெற்றிக்கிண்ணத்துக்கான குறித்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மோதியது. ஆட்ட நேரமுடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் போட்டி சமனிலையானது.

போட்டி ஆரம்பமாகி இடைவேளைக்கு முன்னர் மகாஜனா ஒரு கோலைச் செலுத்தி முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் விடா முயற்சியுடன் மோதின. தொடர்ந்து யூனியன் ஒரு கோலைப் பெற்று போட்டியைச் சமனிலைப் படுத்தியது.

ஆட்டம் 1:1 என சமனிலையில் முடிவடைய வெற்றி - தோல்வியைத் தீர்மானிக்கும் சமனிலை தவிர்ப்பு உதையில் யூனியன் கல்லூரி 3:2 என வெற்றிபெற்று சம்பியனானது. மகாஜனக் கல்லூரி போராடி இரண்டாமிடத்தை பெற்றது.

மகாஜனக் கல்லூரி இவ்வருடம் தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட போட்டியில் 17,20 வயதுப் பெண்கள் அணிகள் இரண்டும் சம்பியனாகியமையோடு, இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனம் நடாத்திய 16 வயதுப் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியிலும் சம்பியனாகியது. *(ம-7,105)*

# உலகக்கிண்ண ரி-20 தொடரில்
## அமெரிக்காவை வீழ்த்தியது பாகிஸ்தான்




ஐ.சி.சி ரி- 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 12 ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணி அமெரிக்காவை வீழ்த்தி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குறித்த போட்டியில் பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகிய அணிகள் மோதின. இதன்படி போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அமெரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணியின் சார்பில் சாஹிப்சாதா பர்ஹான் 73 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். இந்த நிலையில் 191 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அமெரிக்க அணியின் சார்பில் சுபம்ரஞ்சனே 51 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் பாகிஸ்தான் அணியின் சார்பில் உஸ்மான் தாரிக் 3 விக்கெட்டுகளை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. *(3)*

### ‘விறுவிறுப்பான ஆட்டமாக இருக்கும்’
# இந்தியா - பாகிஸ்தான் ஆட்டம் குறித்து கங்குலி கருத்து

ரி-20 உலகக் கிண்ணத்தில் இந்தியா உடனான போட்டியை புறக்கணிப்பதாக பாகிஸ்தான் அரசு அறிவித்தது. ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இது தொடர்பாக ஐ.சி.சிஇற்கு அதிகாரபூர்வமாக அறிவிக்காமல் இருந்தது. மறுபுறம், புறக்கணித்தால் கடுமையான நிதி அபராதம் விதிக்கப்படும் என ஐ.சி.சி எச்சரித்தது.இதனைத் தொடர்ந்து பாகிஸ் தான் கிரிகெட் வாரியத் தலைவர் மொசின் நக்வி, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் உடன் இதுகுறித்து ஆலோசனை நடத்தினார்.

இதையடுத்து தனது முடிவை மாற்றிய பாகிஸ்தான் அரசு ரி-20 உலகக் கிண்ணத்தில் இந்தியா உடனான போட்டியில் விளையாட தங்கள் கிரிக்கெட் அணிக்கு அனுமதி வழங்கியது.

இந்நிலையில் இந்த உலகக் கிண்ணத்தில் இந்தியா - பாகிஸ்தான் போட்டி மிகப்பெரிய ஆட்டமாக இருக்கும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் சவுரவ் கங்குலி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது, இந்த உலகக் கிண்ணத்தில் இது விறுவிறுப்பான ஆட்டமாக இருக்கும். ஆனால் பாகிஸ்தான் அணிக்கு இந்தியாவை வீழ்த்துவது எளிதாக இருக்காது. ஏனெனில் இந்தியா வலுவாகவுள்ளது. சில ஆண்டுகளாக இருதரப்பு மோதலில் இந்தியாவின் ஆதிக்கமே அதிகம் இருந்துள்ளது. இருப்பினும் பாகிஸ்தான் சிறப்பாக விளையாடும் என்று நம்புகிறேன் என சவுரவ் கங்குலி கூறியுள்ளார். *(3)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபா வைரஸ் அச்சுறுத்தல்

## எச்சரிக்கையுடன் அவதானிக்கும் இலங்கை

(கொழும்பு)

உலகம் முழுவதும் சில நாடுகளில் பரவியுள்ள நிபா வைரஸ் தொடர்பில் இலங்கையின் சுகாதாரத் துறையினர் விசேட அவ தானத்துடன் செயற்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரவுள்ளனர். எனவே, இந்த நேரத்தில் சுகாதார அமைச்சு மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் பரவியுள்ளதாகக் கூறப்படும் நிபா வைரஸ் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தியாவில் இந்த வைரஸ் காரணமாக உயிரிழப்புகள் பதிவான உடனேயே சுகாதார அமைச்சு இது குறித்து அவதானம் செலுத்தியது. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் விமான நிலையத்தில் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர்.

இது கடந்த கொவிட் தொற்றைப் போன்றதல்ல, இது மிகவும் ஆபத்தானது.

கடந்த 4 நாட்களில் மட்டும் 40,000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். ஜனவரியில் 2 இலட்சத்து 77 ஆயிரம் பேர் வருகை தந்து சாதனை படைத்துள்ள்னர்.

எனவே நிபா வைரஸ் என்பது பன்றிகள் மற்றும் வௌவால்கள் போன்ற விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய ஒரு வைரஸ் ஆகும்.

வைரஸ் தொற்றிய உணவு மூலமாகவோ அல்லது பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கோ இது பரவலாம். உலக சுகாதார ஸ்தாபனம் இதனைத் தொற்றுநோயாக மாறக்கூடிய ஆபத்துள்ள முன்னுரிமை நோய்களில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது.

இதன் காரணமாக சில நாடுகளில் பரவியுள்ள நிபா வைரஸ் தொடர்பில் இலங்கையின் சுகாதாரத் துறையினர் விசேட அவதானத்துடன் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளனர். (நி)

# முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் 'மெகாகோப் சிற்றி' திறந்து வைப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு. மாவட்டத்தின் நகரப்பகுதியில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் "மெகாகோப் சிற்றி" கடந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. குறித்த அங்காடியினை மீள் புனர்நிர்மாணிப்பது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் அவர்களின் முன்மொழி வில் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் 30 லட்சம் ரூபாய் பெறுமதியில் குறித்த "மெகாகோப் சிற்றி". புனரமைக்கப்பட்டு நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் உபாலி சமரசிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி நிதியில் இருந்து 1.45 மில்லியன் ரூபாய் நிதியிலும் கூட்டுறவுத் திணைக்களத்தின் 5.5 லட்சம் ரூபாய் நிதி உதவியிலும் கூட்டுறவுத் அபிவிருத்தி திணைக்களத்தின் கடனில் இருந்து ஒரு மில்லியன் ரூபாயும் நிதிகளாக கிடைக்கப்பெற்று குறித்த அங்காடி புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (8)

## யானை தாக்குதலுக்குள்ளான ரஷ்யப் பெண்

(கதிர்காமம்)

புத்தல - கதிர்காமம் சாலையில் பயணித்த வெளிநாட்டு தம்பதியினர் நேற்று முன்தினம் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளானதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் ரஷ்ய நாட்டவர் படுகாயமடைந்து அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர் 45 வயதான அரியானா என்ற ரஷ்யப் பெண் ஆவார்.

சம்பவம் நடந்தபோது, அவர் தனது கணவருடன் புத்தலவிலிருந்து கதிர்காமத்திற்கு முச்சக்கர வண்டியில் பயணித்த தாகக் கூறப்படுகி றது. வீதியின் அருகே ஒரு காட்டு யானை நிற்பதைக் கண்ட வெளிநாட்டு தம்பதியினர், தங்கள் முச்சக்கர வண்டியில் இருந்து இறங்கி, காட்டு யானையை புகைப்படம் எடுக்கும் நோக்கத்துடன் அந்த காட்டு யானையை நோக்கிச் சென்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அப்போது, ஆத்திரமடைந்த காட்டு யானை அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்து தாக்கியது.

இந்தத் தாக்குதலில் ரஷ்யப் பெண்ணின் வலது கையில் பலத்த காயம் ஏற்பட்டதால், உடனடியாக கதிர்காமம் பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (நி)

# நீண்டகால ஊழியர்களை கௌரவித்தது பான் ஏசியா வங்கி




பான் ஏசியா வங்கி அண்மையில், தனது நீண்டகால ஊழியர்களின் உறுதியையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிக் கும் வகையில் ஒரு சிறப்பு விருது வழங்கும் நிகழ்வினை தனது மனிதவள பிரிவு மூலம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு பான் ஏசியா வங்கியின் தலைவர் அரவிந்தப் பெரேரா, பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான நளீன் எதிரிசிங்க மற்றும் பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் ஆகியோர் வருகை தந்தனர்.

நாட்டின் பல கிளைகளிலும் வர்த்தகப்பிரிவுகளிலும் பணியாற்றும் சக ஊழியர்கள் ஒன்று சேர்ந்து, 15, 20, 25 மற்றும் 30 ஆண்டுகள் சேவை புரிந்த ஊழியர்களுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

குறிப்பாக, வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான நளீன் எதிரிசிங்க மற்றும் உதவி பொது முகாமையாளர் - மனிதவளம் திருமதி துஷாரி மலால்கொட, 25 ஆண்டுகள் சேவை நிறைவு செய்ததற்காக கௌரவிக்கப்பட்டனர்.

இந்த தினமானது, உத்வேகமான உரைகள், பரிசளிப்புகள் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளால் நிறைவு பெற்றது. இது, வங்கியுடன் இணைந்து வளர்ந்த ஊழியர்களுக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்தும் மகிழ்வான மற்றும் நினைவில் நிற்கும் தருணத்தை உருவாக்கியது.

நிகழ்வில் பிரதம உரையினை வழங்கிய பான் ஏசியா வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான நளீன் எதிரிசிங்க, பரிசு பெறுவோரின் திடமான அர்ப்பணிப்புக்கும் தொழில்முறை நற்பண்புக்கும் பாராட்டு தெரிவித்து கருத்துப் பகிர்வை வழங்கியிருந்தார்.




தேசிய லொத்தர் சபையின் முகவர்களுக்கான காப்புறுதி அறிமுக நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலி பிறைற் இன் விடுதியில் தேசிய லொத்தர் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.நரேஷ், ஜ.ரி.எமர்ஷன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாநகர பிரதி மேயர் இம்மானுவேல் தயாளன் அவர்கள் விற்பனை முகவர்களுக்கான காப்புறுதிப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் வே. கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில், விசுவமடு நெத்தலியாறு கிராமத்தில் உள்ள 75 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

Thamil Aid மற்றும் BBK Partnership ஆகிய அமைப்புகளின் நிதிப் பங்களிப்புடன் குறித்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-299)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

(கரணவாய்)

தொண்டைமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட வவுனியா இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு அறுவைச் சிகிச்சைக்காக 75 ஆயிரம் ரூபா நிதி உதவியும் வவுனியா அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 88 மாணவர்களுக்கு 1 இலட்சத்து 21 ஆயிரம் ரூபா நிதியில் சீருடைகளும் வழங்கப்பட்டன (8-60)

# பனை மரங்களை பாதுகாக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**வடமராட்சிப் பகுதியில் தொடர்ச்சியாக பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருவதுடன் சட்டவிரோதமாக ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

வடமராட்சியின் பெரும் சொத்தான பனைமரங்கள் பல இலட்சக் கணக்கில் யுத்த காலத்தில் அழிக்கப்படிருந்த நிலையில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் தொடர்ந்து அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இதைவிட காணிகளைத் துப்பரவு செய்வதற்காகவும் விவசாயம் மேற்கொள்வதற்காகவும் பனைமரங்கள் இவ்வாறு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்தத்திற்கு முன்பு பாதுகாக்கப்பட்ட பனை மரங்கள் யுத்தத்திற்கு பின்பு அதிகளவு அழிக்கப் பட்டுள்ளன. தொடர்ச்சியாக சட்ட விரோத பனை அழிப்பு இடம் பெற்று வரும் நிலையிலும் இதுவரை குற்றவாளிகள் கைது செய் யப்படவில்லை.

பனைமரத்தில் இருந்து கைத்தொழில் முயற்சியாளர்கள் உட்பட பாமர மக்கள் அதிகளவு பயன்பெற்றுவரும் நிலையில் பனை மரம் அதிகளவாக அழிக்கப்படுவதால் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிப்படைகின்றது.

எனவே பனை மரங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

## மகாசிவராத்திரி விசேட பூசை

(கரணவாய்)

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் மறுநாள் காலைவரை விசேட அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் நடைபெற உள்ளன.

அன்றைய தினம் உஷாக் காலப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு ஸ்நபன அபிசேகம் இடம்பெறும்.

சிவராத்திரி முதலாம் சாமப் பூசை இரவு 7 மணிக்கும் ஸ்நபன அபிசேகம் இரவு 9.30 மணிக்கும், இரண்டாம் சாமப் பூசை இரவு 11 மணிக்கும், நள்ளிரவு 12 மணிக்கு இடம்பெறும்.

இலிங்கோற்பவ காலத்தை தொடர்ந்து வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று பெருமான் பர்வத பத்தினி சமேதராக வீதி உலா வருவார்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு உஷாக் கால பூசை (பாறணைப் பூசை) இடம்பெறும். (8-60)

## கைதடியில் நவீன சந்தைத்தொகுதி அமைக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைதடிப் பகுதியில் நவீன சந்தைத் தொகுதி ஒன்றினை அமைத்து வருமானத்தை பெருக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் செ.ஜெயபாலன் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கைதடியில் நவீன சந்தைத் தொகுதி ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற பிரேரணையை சாவகச்சேரி பிரதேச சபையில் சமர்ப்பித்துள்ளேன்.

மேற்படி எல்லைக்குள் உள்ள பொதுச்சந்தையானது கீழ்த்தளத்தில் சந்தை மற்றும் கடைகள் , பொது மலசலகூடம் ஆகிய வசதிகளுடனும் மேல் தளத்தில் பொதுநோக்கு மண்டபத்தை உள்ளடக்கியும் ஒரு நவீன சந்தைத்தொகுதியாக அமைக்கப்பட வேண்டும்.

கைதடி பொதுச்சந்தையை நவீன சந்தையாக உருவாக்குவதற்கு தேவையான சட்ட ரீதியான எழுத்து மூல உறுதி, ஆவணங்கள் மற்றும் நில அளவைப்படம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து திட்ட வரைபு ஒன்றினை தயாரித்து அதனை சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று நடைமுறைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும் என தெரிவித்தார். (8-30)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வண்ணை வைத்தீஸ்வரன் பரிவாரத் திருக்கோவில் வேம்படிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் உற்சவங்கள் இடம்பெற்று எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும் என ஆலய பரம்பரை தர்மகர்த்தா க. வைத்திலிங்கம் செட்டியார் அறிவித்துள்ளார். (8)

## ஆவரங்கால் - தொண்டைமானாறு வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆவரங்கால்-தொண்டைமானாறு வீதியின் புனரமைப்புப் பணியின் ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் அச்சுவேலி பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இவ் வீதி புனரமைப்பிற்கான ஆரம்ப நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வீதி அபிவிருத்திப் பணிகளை விருந்தினர்களுடன் இணைந்து ஆரம்பித்து வைத்தார்.

"மறுமலர்ச்சிக்கான பாதை" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 670.58 மில்லியன் ரூபா செலவில் 6.03 கி.மீ. நீள்மான குறித்த வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான ச. சிறிபவானந்தராஜா, ஜெ.றஜீவன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன், வடமாகாண வலிகிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ், வடமகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் குரூஸ், கோப்பாய் பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் எஸ். கபிலன் ஆகியோர் கலந்து கொண்டனர் . (8-33)


## யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் Agri tech 2026

(தருமபுரம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் ஐந்தாவது தடவையாக இடம்பெறும் Agri tech 2026 நேற்று நடைபெற்றது.

விவசாய சமூகத்தையும் விவசாய பீட மாணவர்களையும் ஒன்றிணைக்கும் செயற்பாடாகவும் விவசாயிகள் தங்களுடைய பிரச்சினைகளை முன் வைக்கும் களமாகவும் அவற்றினை இறுதியாண்டு மாணவர்கள் தங்களுடைய கற்றல் ஆராய்ச்சியில் எடுத்து, தீர்வை நோக்கி நகரும் செயற்பாடாகவும் Agri tech அமைகின்றது.

ஐந்தாவது தடவையாக இந்த ஆண்டு யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் கந்தையா பகீரதன் தலைமையில் நடைபெற்ற குறித்த மாநாட்டில்,பொறியியல் பீட பீடாதிபதி, விவசாய பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஜப்பான் பல்கலைக் கழகத்திலிருந்து யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் விரிவுரையாளர்கள், விவசாயத்துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், விவசாயத்துறை சார்ந்த தனியார் நிறுவனங்கள் சார்ந்தோர், வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்த விவசாய அமைப்பு சார்ந்தோர், விவசாயிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

## வயல் மற்றும் மேட்டுக் காணிகளை பதிவு செய்வதற்கான அறிவித்தல்

(சாவகச்சேரி)

கமக்காரர்களை Farmer Net.LK இணையத்தளத்தில் பதிவு செய்யும் தேசிய வேலைத்திட்டம் கைதடி கமநலசேவை நிலையத்தில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தனங் களப்பு கமக்கார அமைப் பிற்கு உட்பட்டு வயற்காணி மற்றும் மேட்டு தோட்டக் காணிகளில் செய்கையில் ஈடுபடுபவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பாக கைதடி கமநல சேவைகள் நிலையங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும், பதிவுகளை மேற் கொள்ள வரும் விவசாயிகள் தேசிய அடையாள அட்டை, தொலைபேசி இலக்கம் மற்றும் ஏக்கர் வரிப்பற்றுச் சிட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டிறைச்சிக்கு விலை நிர்ணயம்

(மன்னார்)

மாட்டிறைச்சி விலை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் மன்னார் நகர சபை, பிரதேசசபை மற்றும் நானாட்டன், முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேசசபை ஆகியவற்றின் மாட்டிறைச்சியின் நிர்ணய விலை 10.02.2026 முதல் தனி இறைச்சி 2200 ரூபாவுக்கும், முள் இறைச்சி 2000 ரூபாவுக்கும் (200 கிராம் முள்ளும் 800 கிராம் இறைச்சியும்), தனி முள்ளு 1200 ரூபாவுக்கும், ஈரல் 2500 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கு மாவட்ட செயலாளர் முன்னிலையிலும் தவிசாளர்கள் மற்றும் கடை உரிமையாளர்களின் முன்னிலையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் இறைச்சிக் கடை உரிமையாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் விரைவில் தீர்வுக்கு கொண்டு வருவதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார். (8)

# மன்னார் அபிவிருத்தி தொடர்பில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஆராய்வு

(மன்னார்)



மன்னார் மாவட்ட போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் உள்ளூராட்சி அபிவிருத்தி தொடர்பான விசேட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு மற்றும் முசலி ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றப் பகுதிகளில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதிகள் புனரமைப்பு பணிகள், போக்குவரத்து மேம்பாடு, நகர அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சி தொடர்பான விடயங்கள் உரிய திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டன.

மேலும், மன்னாரிலிருந்து முசலி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இளவன் குளம் ஊடாக புத்தளத்திற்கு செல்லும் பிரதான வீதியை திறந்து பொதுமக்களின் பாவனைக்கு விடுமாறு கௌரவ அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (8-285)

# பருத்தித்துறை துறைமுகமாகிறது பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம்

## நகரசபையில் தீர்மானம்

பருத்தித்துறை நகரை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது.

நகரசபைத் தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண திட்டமிடல் பணிப்பாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் திட்டமிடல் குழுவினர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, புராதன நகரான பருத்தித்துறை நகரின் அடையாளங்களில் ஒன்றான பருத்தித்துறை துறைமுகத்தினை "மீன்பிடி துறைமுகம்" என்று குறிப்பிட்டிருந்த நிலையில் அதனை "பருத்தித்துறை துறைமுகம்" என அடையாளப்படுத்து மாறும், அபிவிருத்தி செய்யப்படும் போதும் அதில் மீனவர்களிற்கான ஒரு பகுதியும் பொருட்களை ஏற்றி இறக்கக்கூடிய பகுதியுமாக பல்துறை நோக்கம் கொண்டதாக அமைய வேண்டும் எனவும், "வாடி வீட்டை" முன்னிலைப்படுத்தி அபிவிருத்தி செய்து தருமாறும் நகர சபை தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் சாதகமாக பரிசீலிப்பதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தரப்பில் கூறப்பட்டிருந்தது.

அத்துடன் பருத்தித்துறையின் புராதன அடையாள சின்னமான வெளிச்சவீடு இராணுவ ஆக்கிரமிப்பில் இருப்பது தொடர்பாகவும் நகர சபை தரப்பில் வெளிப்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)


## அறிவித்தல்

KKS வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை காரியாலய மேல் பகுதி கட்டடம், கிளை -01 கட்டடம், மொத்த நிலைய கட்டடங்கள் வாடகைக்கு வழங்கப்படவுள்ளதால் தேவைப்படுவோர் 27.02.2026 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் வாடகை மற்றும் முற்பணம் என்பவற்றை குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தினை தலைமைக்காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக தகவலுக்கு **077 317 0720** தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து)

(C-4980)



## மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 04 - 1928



மறைவு 10 - 02 - 2026

### அப்புக்குட்டி குணரத்தினம்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், கொழும்பு, அவுஸ்திரேலியா, தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி குணரத்தினம் (ஓய்வு பெற்ற மின்சார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்கள் 10.02.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி- மாணிக்கம் தம்பதிகளின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான தம்பு- சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா, கந்தசாமி அவர்களின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான புஷ்பராணி, ரவிராணி(சுவிஸ்)மற்றும் வேல்சிவானந்தன் (ஓய்வு பெற்ற அதிபர் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), அருளானந்தம், செல்வநந்தன்(சுவிஸ்), உதயராணி(அவுஸ்திரேலியா), லலிதாராணி (அவுஸ்திரேலியா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம்,பேரின்பராசா (சுவிஸ்) மற்றும் அருந்ததி (ஓய்வு பெற்ற பிரதி விவசாயப் பணிப்பாளர்), விஜயகுமாரி, ஜெயவதனி(சுவிஸ்), இராமச்சந்திரன் (அவுஸ்திரேலியா), சத்தியபாலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அகல்யா, அபிராமி, ஜிவிதன், பகீரதன், துளஷா, தர்ஷிகா, பிரதீபா, அனுஷன், சுஜித்தா, சுகிர்தன், சாம்பவி, சஞ்சஜ், அர்ச்சன், கோகுல், ஆராதனா ஆகியோரின் அன்புப் பேரனும் அய்ரா, ஏவா, அய்லா, அயானா, நியான், ரைலன், அட்வின், ரேக்ஷா, ருத்விக், நிலா, நிவன் ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12.02.2026 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தெல்லிப்பழை கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விராலோடை,
தெல்லிப்பழை.

தகவல்-குடும்பத்தினர்
வேல்சிவானந்தன் 077 654 7486
அருளானந்தம் 077 707 2893

(6805)



## விழி நீரால் நனையும் 31 ஆம் நாவில்...



மண்ணில் 13 . 04 . 1957

விண்ணில் 11 . 01 . 2026

### அமரர்.தவசிநாதன் சிங்கராசி

(சின்னம்மா)

காலங்கள் மாறலாம் பருவங்களும் மாறலாம்
உலகிலுள்ள அனைத்தும் மாறலாம் - அம்மா
நீங்கள் இல்லாத இவ்வுலகில் எமக்கேது வாழ்வு
நம்பினோம் நீங்கள் எங்களுடன் தான் இருப்பீர்கள் என்று
ஆனால் அரைகுறையில் எமைவிட்டு நீங்கிய தேனோ
ஆதரவின்றி தவிக்கின்றோம்
இயற்கையின் நியதி இதுவென்றாலும்
இடைநடுவே உமைப்பறித்த கொடுமையை எப்படி அம்மா மறப்போம்

சிவரந்தோட்டம்,
சமரபாகு, வல்வெட்டித்துறை.


என்றும் உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

(2043)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன்
### அடுத்த வாரம் இந்தியாவுக்கு விஜயம்



(டில்லி)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் 3 நாள் சுற்றுப்பயணமாக இந்தியாவுக்கு செல்லவுள்ளார். இந்தப் பயணத்தின் போது டில்லியில் நடைபெறும் ஏ.ஐ உச்சி மாநாட்டிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

பெப்ரவரி 17ஆம் திகதி மும்பையில் இருந்து தனது சுற்றுப்பயணத்தை தொடங்கும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், இந்தியா - பிரான்ஸ் year of innovation நிகழ்ச்சியில் இந்திய பிரதமர் மோடியுடன் இணைந்து கலந்துகொள்ளவுள்ளார்.


அதனை தொடர்ந்து, மும்பையில் இருநாட்டு தலைவர்களின் உயர்மட்ட சந்திப்பு மற்றும் பேச்சுவார்த்தை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பெப்ரவரி 19ஆம் திகதி டில்லியில் நடைபெறும் ஏ.ஐ உச்சி மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

கடந்த ஆண்டு பிரான்ஸில் வைத்து நடைபெற்ற ஏ.ஐ உச்சி மாநாட்டில் மோடி கலந்துகொண்ட நிலையில், இந்த ஆண்டு டில்லியில் நடைபெறும் ஏ.ஐ உச்சி மாநாட்டில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் கலந்துகொள்ளவுள்ளார். (3)



## எரிபொருள் தட்டுப்பாட்
## அமெரிக்காவின் நடவடிக்



(மொஸ்கோ)..........

எரிபொருள் தட்டுப்பா
ணமாக கியூபா முடங்கும்
குத் தள்ளப்பட்டுள்ளதாக
எச்சரித்துள்ளதுடன், அமெ
வின் மனிதாபிமானமற்ற
டிக்கைகளுக்கு தனது கண
தையும் தெரிவித்துள்ளது.

தென் அமெரிக்க நாடான கியூபா, தனது அண்டை நாடான வெனிசுலாவிலிருந்து குறைந்த விலையில் கச்சா எண்ணெயைப் பெற்று வந்தது.

அதற்கு ஈடாக பாதுகாப்பு, மருத்துவம் மற்றும் கல்விச் சேவைகளை கியூபா வழங்கி வந்தது.

சமீபத்தில், வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியாவை அமெரிக்க இராணுவம் கைது செய்து நியூயோர்க் சிறையில் அடைத்ததைத் தொடர்ந்து, வெனிசுலாவின் எண்ணெய் சந்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

வெனிசுலாவிலிருந்து கியூபாவுக்கு வழங்கப்பட்டு வந்த கச்சா எண்ணெயை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிறுத்தியுள்ளார்.

மேலும், கியூபாவுக்கு எண்ணெய் வழங்கும் ஏனைய நாடுகளுக்கு வரி விதிக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஏற்கனவே கியூபா மீது

## கனேடியப் பாடசாலையில்
## துப்பாக்கிச் சூடு
### ➤ 10 பேர் உயிரிழப்பு
### ➤ பலர் படுகாயம்



(விக்டோரியா)

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஒரு உயர்நிலைப் பாடசாலையிலும், ஒரு குடியிருப்புப் பகுதியிலும் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது பத்து பேர் உயிரிழந்ததாக கனேடிய பொலிஸார் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் சந்தேகத்திற்குரிய துப்பாக்கிதாரியும் அடங்குவதாக கூறப்படுகிறது.


உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.20 மணியளவில் டம்ளர் ரிட்ஜ் மேல்நிலைப் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக வந்த தகவல்களின் பேரில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இதன்போது அங்கு ஆறு பேர் இறந்து கிடந்தனர், பலர் காயமடைந்த நிலையில் காணப்பட்டனர்.

மற்றொருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் போது உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் கடுமையான காயங்களுக்கு உள்ளானவர்கள் மீட்கப்பட்டு விமானம் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் சுமார் 25 பேர் உள்ளூர் மருத்துவ மையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் கனேடியப் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக நம்பப்படும் ஒரு வீட்டில் மேலதிகமாக இரண்டு பேர் இறந்து கிடந்ததாக பொலிஸார் ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

எனினும், துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்டவர்களில் எத்தனை பேர் மாணவர்கள் அல்லது பெரியவர்கள் என்பது குறித்த விபரங்கள் வெளியிடப்படவில்லை.

மாகாணத்தின் வலைத்தளத்தின் படி, டம்ளர் ரிட்ஜ் மேல்நிலைப் பாடசாலையில் 7 முதல் 12 ஆம் வகுப்பு வரை 175 மாணவர்கள் கல்வி பயிலுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ால் முடங்கியது கியூபா

# ...கைக்கு ரஷ்யா கண்டனம்!

...டு கார
நிலைக்
ரஷ்யா
...மரிக்கா
...ற நடவ
...ண்டனத்





...மெரிக்கா பொருளாதாரத் தடைகளை ...தித்துள்ள நிலையில், இந்த நட...டிக்கை அந்நாட்டை கடும் நெருக்...க்குள் தள்ளியுள்ளது.

இதனால் விமானம் மற்றும் இதர ...பாக்குவரத்து சேவைகள் முற்றாகப் ...திக்கப்பட்டுள்ளன.

...நிலைமையைச் சமாளிக்க அலுவல...ங்கள், பாடசாலைகள் மற்றும் ...்கலைக்கழகங்களை 4 நாட்களுக்கு ...ட கியூபா அரசு உத்தரவிட்டுள்...து.

அமெரிக்காவின் இந்தச் செயலால் கியூபாவின் எரிசக்தி நிலைமை மோசமடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள ரஷ்யா, கியூபாவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

அதேபோல், மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம், அமெரிக்காவின் வரி எச்சரிக்கைகளுக்கு அஞ்சாமல் கியூபாவுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரும் இந்தச் சூழல் குறித்துத் தனது வருத்தத்தைப் பதிவு செய்துள்ளார். (3)

# பங்களாதேஷுக்கான வரிகளை 18 சதவீதமாக குறைத்தது அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பங்களாதேஷ் ஆடை மற்றும் ஆபரணப் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிப்பதற்கான புதிய ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, டாக்கா தனது சந்தைகளை பரந்த அளவிலான அமெரிக்கப் பொருட்களுக்களைத் இறக்குமதி செய்வதற்கு ஈடாக, வோஷிங்டன் பங்களாதேஷின் மீதான அதன் வரிகளை 20 சதவீதத்திலிருந்து 19 சதவீதம் ஆகக் குறைத்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலகளாவிய வர்த்தக பங்காளிகள் மீது கடுமையான வரிகளை விதித்ததைத் தொடர்ந்து, தெற்காசிய நாடு வெள்ளை மாளிகையுடன் நீண்டகால பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என்றும், இரு நாடுகளுக்கும் ஒவ்வொரு சந்தைக்கும் "முன்னோடியில்லாத அணுகலை" வழங்கும் என்றும்வெள்ளை மாளிகை இரு தரப்பினருக்கும் இடையிலான கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா பங்களாதேஷ் மீதான அதன் வரி விகிதத்தைக் குறைக்கும் என்றும், நாட்டிலிருந்து அமெரிக்காவிற்குள் வரிகள் இல்லாமல் நுழைய சில ஆடை மற்றும் ஜவுளிப் பொருட்களை அடையாளம் காணும் என்றும் அது கூறியது.

அமெரிக்க பருத்தி மற்றும் செயற்கை ஜவுளிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்களும் இதில் அடங்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பங்களாதேஷின் மொத்த ஏற்றுமதி வருவாயில் 80 சதவீதத்துக்கும் அதிகமான பங்கை ஆடைத்துறை கொண்டுள்ளது மற்றும் சுமார் நான்கு மில்லியன் தொழிலாளர்களைப் பணியமர்த்துகிறது.

இதற்கு ஈடாக, அமெரிக்க விவசாய மற்றும் தொழில்துறை பொருட்களுக்கு "குறிப் பிடத்தக்க முன்னுரிமை சந்தை அணுகலை" வழங்க பங்களாதேஷும் ஒப்புக் கொண்டுள்ளது.

இதில் அமெரிக்க இரசாயனங்கள், மருத்துவ சாதனங்கள், கார் பாகங்கள், சோயா பொருட்கள் மற்றும் இறைச்சிக்கு அதன் சந்தைகளைத் திறப்பது அடங்கும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (3)



# 'ஏஐ' காணொளிகள் 16 பிரபல சேனல்களை அதிரடியாக நீக்கியது யூடியூப் நிறுவனம்!




செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் ...ருவாக்கப்பட்ட காணொளிகளைப் ...திவேற்றிய மிகவும் பிரபலமான பல ...டியூப் சேனல்களை அகற்றுவதற்கு ...டியூப் நிறுவனம் நடவடிக்கை ...டுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் ...சய்தி வெளியிட்டுள்ளன.

அதிகப்படியான பார்வையாளர்களைப் பெறுவதற்காக, கணினிகளால் உருவாக்கப்பட்ட, தரம் குறைந்த மற்றும் ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்பக் காட்டும் காணொளிகளை இந்த சேனல்கள் பதிவேற்றியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சேனல்களை அகற்றும் நடவடிக்கை 2025 நவம்பரில் தொடங்கியது.

இதுவரை மிகவும் பிரபலமான 100 ஏஐ சேனல்களில் 16 சேனல்களை இலக்கு வைத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அகற்றப்பட்ட அந்த 16 சேனல்களும் ஒட்டுமொத்தமாக 35 மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்களையும், சுமார் 4.7 பில்லியன் பார்வையாளர்களையும் கொண்டிருந்ததாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.


மேலும், அவற்றின் வருடாந்திர வருமானம் சுமார் 10 மில்லியன் [illegible] கூறப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.போதனா வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்காக சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களுக்கு வழங்குவதற்காக ஒரு தொகுதி இன்சுலின் ஊசி மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. யாழ்.நீரிழிவு கழகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒரு இலட்சம் ரூபா நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

குறித்த நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட இன்சுலின் ஊசி மருந்துகள் வைத்திய நிபுணர் ம.அரவிந்தன் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தன்னியக்க கட்டுப்பாட்டு முறையிலான தடையற்ற நீர் விநியோகத்தை வழங்கும் தொகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வடமராட்சியில் 1992ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கல்வி கற்ற அணியினரின் 2.5 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் குறித்த தொகுதி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**படம் - மகாலிங்கம்**


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்:5'8"
தகைமை/தொழில்: Dip in QS, Business
எதிர்பார்ப்பு: தகுதியானபெண்
தொ.இ: B/16501

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:கேட்டை
கி.பா:15
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.Business, Enforcement Officer (Australia)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16503

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:மகம்
கி-பா-11
உயரம்:6"
தகைமை/தொழில்- HND (Software Engineer), Project Coordinator
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16504

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்: மூலம்
கி-பா-61 1/2
12இல்செவ்
உயரம்:5'4"
தகைமை/தொழில்-A/L, MA
எதிர்பார்ப்பு: Teacher
தொ.இ: B/16505

பிறப்பு: 1999- இந்து
நட்சத்திரம்: பூசம்
8ல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: AAT, BCom,Auditor
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16506

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:2000-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி-பா-7 1/2
11இல் சூரிசெவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bio Science
எதிர்பார்ப்பு: விஞ்ஞான பட்டதாரி
தொ.இ: G/16502

பிறப்பு -2001 - இந்து
நட்சத்திரம்: உத்தரம்
7இல்செவ்
கி.பா: 56
உயரம்: 5'3"
தகைமை/தொழில் - A/L, Beautician
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16507

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HND (Civil Engineering), Customer Care
எதிர்பார்ப்பு: தகுதியானஆண்
தொ.இ: G/16511

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்-கேட்டை
கி-பா- 15
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc
எதிர்பார்ப்பு - பட்டதாரி
தொ.இ: G/16513

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்:பரணி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc,MSc(London)
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: G/16514

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 537

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## தேக அபிமானம்

"அந்த ஆள் என்னை கன்னாபின்னா என்று திட்டி விட்டான் சார்! அதை நினைத்தால் ரொம்ப வருத்தமாக இருக்கு சார்!" என்று சொல்லி கவலைப்பட்டார் ஒருவர்.

"இதிலே கவலைப்படுவதற்கு என்ன இருக்கு?" என்றார் ஒரு பெரியவர். அவர் ஒரு மகான்.

"என்ன சார் இப்படி சொல்கிறீர்கள்? ஒருவர் நம்மை பார்த்துத் திட்டினால் வருத்தமாக இருக்காதா?" என்றார் இவர்.

"அது எப்படி வருத்தமாக இருக்கும்? திட்டுவது என்ன? அது வெறும் சப்தம் தானே!" என்றார் அந்தப் பெரியவர்.

நம் ஆளுக்குத் தலையைப் பிச்சிக்க வேண்டும் போல இருந்தது. இருக்காதா பின்னே? நமக்கே அப்படித்தானே தோன்றுகிறது!

அந்தப் பெரியவர் சொல்வது ரொம்பப் பெரிய விடயம். அதை நாம் புரிந்துகொள்ள முயற்சி பண்ணலாம் என்றால், நடைமுறை வாழ்க்கைக்கு அது ஒத்து வருகின்ற மாதிரி தெரியாது. இருந்தாலும் அந்தப் பெரியவர் அதற்கு என்னதான் விளக்கம் கொடுக்கிறார் என்று பார்ப்போமே!

ஒரு ரயில் போய்க் கொண்டிருக்கிறது! அதிலே ஒரு சாது போய்க்கொண்டிருக்கிறார். ஹரித்துவாரம் போய்க்கிட்டிருக்கார் அவர்.

ரயிலிலே ஏகப்பட்ட கூட்டம். நம் ஊர் ரயில்! கேட்கவா வேண்டும்! டிக்கெட் வாங்கிக்கொண்டு பாதிப்பேர்! "அது என்னத்துக்கு அனாவசியமா டிக்கெட்" என்ற நினைப்பிலே பாதிப்பேர் இந்த கூட்டத்துக்கு மத்தியிலே அந்த சாதுவும் போய்க்கொண்டிருக்கிறார்.

உட்காருவதற்காக இருந்த இடத்திலே ஒரு ஆள் படுத்திருந்தான். கொஞ்சம் முரட்டு ஆசாமி. அவன் கால் பக்கத்திலே கொஞ்ச இடம் பாக்கி இருந்தது. அந்த இடத்திலே இந்த சாது உட்கார்ந்தார்.

ஆனால் அந்த ஆள் இரவு முழுவதும் இவரை காலாலே உதைந்து கொண்டே இருந்தான்.

அது இவருக்கு ரொம்ப அவமானமாகப் பட்டது. துக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் அதை ஒரு மாதிரியாக சகித்துக் கொண்டே இவர் வந்து சேர்ந்தார். பொழுது விடிந்தது.

அந்த சாது ஹரித்துவார் வந்து சேர்ந்தார். அங்கே ஒரு பெரிய ஞானியை அவர் சந்தித்தார்.

இரவு ரயிலிலே அந்த ஆள் உதைத்ததையும் அதனாலே தனக்கு ஏற்பட்ட துக்கத்தையும் இந்த சாது அந்த ஞானியிடம் சொன்னார். சொல்லிவிட்டு "ஏன் சுவாமி? எனக்குத் துக்கம் ஏற்பட்டதே, அது தவறா?" என்று கேட்டார். "தவறுதான்.." என்றார் அந்த ஞானி. "உனக்கு இன்னமும் தேக அபிமானம் போகவில்லை என்று சொல்வதைத்தான் இது காட்டுகிறது. அஷ்டாவக்கிரர் என்ன சொல்கிறார் தெரியுமா?

உண்மையான ஞானி, யாராவது தன்னை வந்தனை, நிந்தனை செய்தால் அதற்காக வருத்தப்படமாட்டார் என்று சொல்கிறார்.

நிந்தனை என்பது ஒலிதான். தேகாபிமானம் இருக்கிற வரைக்கும் இந்த ஒலி நம்மை வேதனைப்படுத்தும் தேகம் இல்லை, ஆத்மா என்ற நினைவு இருந்தால் இந்த ஒலி நம்மைப் பாதிக்காது.

மனு என்ன சொல்கிறார் தெரியுமா? ஒரு சாதகன் பாராட்டுதலை விஷம் என்று நினைத்து பயப்பட வேண்டும்: அவமானத்தை அமிர்தம் என்று நினைத்து சந்தோஷப்பட வேண்டும் என்கிறார்.

அவமானப்பட்டால், கவலைப்படாமல் எப்படி இருக்க வேண்டும் என்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

அதனாலேதான் நம்மளிலே யாரையும் இதற்கு உதாரணம் காட்ட முடியவில்லை! புத்தரையும் கபீரையும் உதாரணமாகக் காட்டுகிறார்கள். அவர்களெல்லாம் அவமானம் ஏற்பட்டபோது கவலைப்படவில்லை.

புத்தரை அவமானப் படுத்துவதற்காக. கௌசாம்பி ராணி, ஓர் இளம் பெண்ணை கொலை செய்து சடலத்தை புத்தர் குடிசைக்கு முன்னாலே போடச் சொன்னார். போட்டார்கள்.

புத்தர்தான் அந்த பெண்ணைக் கெடுத்துக் கொலை செய்து விட்டார் என்று எல்லாரும் நினைத்தார்கள். ஆனால் புத்தர் இதைப்பற்றி கவலையே படவில்லை. அதன்பின் உண்மை புரிந்ததும் புத்தர் புகழ் இன்னமும் அதிகமானது.

ஒரு பெரிய சபையிலே மோசமான பெண் நுழைந்து தனக்கும் கபீருக்கும் சம்பந்தம் உண்டு என்று சொன்னாள்! கபீர் கவலைப் படவில்லை!

அவர்கள் மாதிரியெல்லாம் நாமும் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நிந்தனை - அபகீர்த்தி - அவமானம் எல்லாம் ஆண்டவன் கொடுக்கின்ற பிரசாதம் என்று நினைக்க வேண்டும்" என்று சொல்கிறார் அந்த ஞானி.

இதைக் கேட்ட இந்தக் காலத்து ஆசாமி ஒருவர் கூட அப்படித்தான் சார். யாராவது அவமானப்படுத்தினால் கவலைப்படமாட்டேன்.

நேற்றுக்கூட ஒருவர் என்னை "பளார்" என்று அறைந்து விட்டார். நான் கொஞ்சம் கூட கவலைப்படவில்லை பேசாமல் வந்துவிட்டேன்! என்றார்.

"ஏன் அப்படி வந்துவிட்டீர்கள்?" என்றேன். "அவர் அறைஞ்சதுலேயும் ஒரு அர்த்தம் இருந்தது அதனாலே அப்படி வந்துவிட்டேன!" என்றார்.

"ஏன் அறைஞ்சார்?" என்று கேட்டேன்! 10 வருடத்திற்கு முன்பு ஒரு 15 ரூபா அவரிடம் கடன் வாங்கினேன். அதைக் கேட்டுப் பார்த்துவிட்டு ... அறைந்தார் என்றார். ஆண்டவனுடைய பிரசாதம் இவருக்கு ... கிடைக்கும் போலேயிருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க யாழ். பல்கலைக்குச் சொந்தமான காணிக்கு எல்லையிடத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் அபிவிருத்திப் பணிகளைப் படிப்படியாக ஆரம்பிப்பதற்கும் காணி ஆக்கிரமிப்பைத் தடுக்கும் வகையில் எல்லைகளை இட்டு வேலி அமைப்பதற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் முன்வந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட விடயத்துக்கு அமைவாக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இத் தீர்மானம் எட்டப்பட்டது.

கடந்த 27.01.2026 அன்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் நீண்டகாலமாக எவ்வித அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லையெனவும் இதனால் அக்காணியைத் தனிநபர்கள் ஆக்கிரமிப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஆராய்ந்து உடனடித் தீர்வு காண்பதற்காக இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா, முல்லைத்தீவில் எமக்கு ஒதுக்கப்பட்ட காணியில் செயற்பாடுகளை ஆரம்பிக்க நாம் தயாராகவே உள்ளோம். எனினும், போதிய நிதி ஒதுக்கீடுகள் இன்மை காரணமாகவே தாமதம் ஏற்பட்டது, எனத் தெளிவுபடுத்தினார்.

இதற்குத் தீர்வாக, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதி ஒதுக்கீட்டிலிருந்து, பல்கலைக் கழகத்தின் ஆரம்பக்கட்ட கட்டுமானப் பணிகளுக்காக ஒரு தொகுதி நிதியை வழங்குவதற்கான முன்மொழிவைச் சமர்ப்பிப்பதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் உறுதியளித்தார்.

பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட 44 ஏக்கர் காணிக்குரிய எல்லைகளை உடனடியாக அளவீடு செய்து, வேலி அமைக்கும் பணிகளைப் பல்கலைக் கழக நிர்வாகம் விரைவில் ஆரம்பிக்கும் எனத் துணைவேந்தர் உறுதியளித்தார்.

வேலி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்டச் செயலகம் வழங்கும் நிதி உதவியுடன் படிப்படியாகக் கட்டட நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. (8)




இலங்கை பொது நிதி கணக்காளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பொதுத் துறை பிரிவு இணைந்து ஏற்பாடு செய்த சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் விருதுகள் - 2025 வழங்கும் விழா, அண்மையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்காட்சி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் மன்னார் மாவட்டச் செயலகம், தனது வரலாற்றில் முதன்முறையாக பங்குபற்றி விருதை பெற்றுக்கொண்டது.

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/வேலணை மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் வி.இ.ஹஸ்ரன் றோய் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞான சம்பந்தப்பிள்ளை ஞானசுந்தரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 400 | 400 | 450 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 160 | -- | 370 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 300 | 300 | 250 |
| தக்காளி | 120 | 180 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 160 | 200 | 100 |
| கோவா | 200 | 200 | 200 | 250 | 250 | 220 |
| கரட் | 300 | 400 | 400 | 400 | 400 | 330 |
| பூசணி | 100 | 100 | 100 | 140 | 100 | -- |
| புடோல் | 150 | 150 | 150 | 250 | 150 | 220 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 200 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 | 160 | 260 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 | 200 | 150 | -- |
| பாகற்காய் | 500 | 450 | 400 | 600 | 400 | 400 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 400 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 800 | 400 | 600 | 400 | 300 |
| லீக்ஸ் | 400 | 450 | 400 | 400 | 350 | 320 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 650 | 600 | 800 | 400 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | -- | 2000 | -- |
| போஞ்சி | 200 | 250 | 300 | 350 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 800 | 80-160 | 150 | 150 | -- | 80 |
| தேசிக்காய் | 150 | 100 | 200 | 200 | 100 | 65 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 150 | 100-150 | -- | 110 |
| இராசவள்ளி | 500 | 350 | 400 | 400 | -- | 375 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 200 | 250 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 | 150 | 90 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 100 |

# இராசிபலன்

12.02.2026
தை 29, வியாழக்கிழமை
தசமி பிற்பகல் 1.08 மணிவரை

கேட்டை பிற்பகல் 2.27 மணிவரை
சுப நேரம் 8.04-9.34 மணிவரை
இராகுகாலம் 2.04-3.34 மணிவரை

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள்.

**ரிஷபம்:** சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், குடும்பத்தில் எதிர்பாராத வகையில் சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**மிதுனம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யானக் கனவுகள் நனவாகலாம், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், கடன் சுமை குறையும், புதிய வழியைக் கையாள்வீர்கள், உறவினர் வருகையால் உற்சாகம் கூடும், பகையொன்று நட்பாகலாம்.

**சிம்மம்:** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**கன்னி:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்களின் செயற்பாடுகளுக்கு பக்க பலமாக இருப்பர், புதிய நபர்களின் சந்திப்புண்டு.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்:** அனைத்திலும் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன நன்மையுண்டு.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** மனம் குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பணவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் கூடும், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ஒருவரையும் நம்பாதவனை மற்றவர்களும் நம்ப மாட்டார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 976





"ஐயோ! தங்களை நான் பரிகசித்தால் கொடிய நகரத்துக்குப் போவேன்"

"வேண்டாம், வேண்டாம்! எது எப்படியிருந்தாலும் சரி பழுவேட்டரையரின் 'தர்ம பத்தினி' என்று என்னைக் குறிப்பிட வேண்டாம், நான் அவருடைய மனைவியே அல்ல"

"ஐயோ! இது என்ன சொல்கிறீர்கள்?". "உண்மையைத்தான் சொல்கிறேன். பலவந்தமாக ஒரு பெண்ணைப் பிடித்துக் கொண்டு வந்து வைத்திருந்தால், அவள் மனைவி ஆகிவிடுவாளா?"

"தேவி! தாங்கள் தமிழ் நாட்டுப் பெண் குலத்தில் வந்தவர். பெண் குலத்தின் தர்மத்துக்கு மாறாகத் தாங்கள் எதுவும் செய்ய மாட்டீர்கள்!"

"பெண் குலத்தில் தர்மத்தை நான் அறிந்துதானிருக்கிறேன். பழந்தமிழ் நாட்டுப் பெண்கள் மனத்தினால் யாரைக் காதலித்தார்களோ, அவரையே கணவனாகக் கொண்டார்கள். பலவந்த மணத்துக்கு அவர்கள் உடன்படுவதில்லை!"

"ஆனால் தாங்கள்". "நீர் சொல்லப்போவது எனக்குத் தெரியும். பழுவேட்டரையருடைய பலவந்த மணத்துக்கு நான் எப்படி உடன்பட்டேன் என்று கேட்கிறீர்.

ஒரு முக்கிய நோக்கத்துக்காகவே உடன்பட்டேன். பழந்தமிழ் நாட்டுப் பெண்களுக்கு மற்றொரு சிறப்பியல்பும் உண்டு. அவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பழி வாங்கியே தீருவார்கள்.

ஐயா! நீர் எனது காதல் நிறைவேறுவதற்குத்தான் உதவி செய்யவில்லை. என் விரோதிகள் மீது பழி வாங்குவதற்காவது உதவி செய்வீரா?"

கடைசியாக நந்தினி கூறிய மொழிகள் ஏககாலத்தில் வந்தியத்தேவனுடைய நெஞ்சை வஜ்ராயுதத்தினால் பிளப்பது போலவும், அவன் தலையில் திடீரென்று பேரிடி விழுவது போலவும் அவனைத் திணறித் திண்டாடச் செய்தன.

"தேவி! தேவி! இது என்ன? காதலாவது? பழியாவது? எனக்கும் தங்கள் காதலுக்கும் என்ன சம்பந்தம்? காதலுக்கும் பழி வாங்குவதற்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் உண்டு ஆனால் அதைப் பற்றி சொல்வதற்கு இப்போது நேரம் இல்லை.

அதோ, இளவரசரும் மணிமேகலையும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

நாளை நள்ளிரவு நேரத்தில் நான் இருக்கும் அறைக்குத் தனியாக வந்தால் சொல்லுகிறேன்"

"அது எப்படிச் சாத்தியம், தேவி! தாங்கள் அந்தப்புரத்தில் இருக்கிறீர்கள். நான் எப்படி அங்கே நள்ளிரவில் தனியாக வரமுடியும்?"

"அதே அந்தப்புர அறையிலிருந்தும் ஒரு நாள் நீர் யாரும் அறியாமல் தப்பித்துக் கொண்டு செல்லவில்லையா? போன வழியாகவே அங்கே திரும்பி வரலாம் அல்லவா? உமக்கு மனம் மட்டும் இருந்தால்" வந்தியத்தேவனுடைய திகைப்பு இப்போது பரிபூரணமாகிவிட்டது.

ஆனால் நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. எப்போதும் போலப் புன்னகை தவழ்ந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நல்ல நண்பர்கள்



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் பாவண்ணன், மதியழகன், அறிவரசன் என்ற மூன்று புலவர்கள் இருந்தனர். மூவருமே உயிருக்கு உயிரான நண்பர்களாக விளங்கினார்கள்.

அந்நாட்டு அரசன் தன்னைப் புகழ்ந்து பாடிய பாவண்ணனுக்குப் பணப்பை ஒன்றைப் பரிசாக அளித்தான்.

வறுமையால் வாடிக் கொண்டிருந்த அறிவரசனின் மனைவி இதை அறிந்தாள். "உங்கள் நண்பருக்குப் பெரும்பொருள் பரிசாகக் கிடைத்துள்ளது.

ஆனால் நம் குழந்தைகளுக்கோ அடுத்தவேளை உணவு சாப்பிடக்கூட பொருள் ஏதும் இல்லை. நமக்கு உதவி செய்யுமாறு உங்கள் நண்பருக்கு மடல் எழுதுங்கள்"என்றாள்.

அதன்படி அறிவரசனும் மடல் எழுதி அதை அவனுக்கு அனுப்பினான். பாவண்ணன் பரிசுடன் வீடு வந்தான்.

அங்கே உதவி கேட்டு நண்பன் எழுதிய மடல் அவனுக்காகக் காத்திருந்தது.

அதைப் படித்த அவன் தான் கொண்டு வந்த பரிசுப் பொருள் அனைத்தையும் அறிவரசனுக்குக் கொடுத்து அனுப்பினான்.

நடந்தவற்றைக் கண்ட அவன் மனைவி, "வந்த பரிசுப் பொருள் அத்தனையையும் உங்கள் நண்பருக்கு அனுப்பி விட்டீர்களே! நம் வீட்டு வறுமை உங்களுக்குத் தெரியாதா? இரவு நாமும் நம் குழந்தைகளும் சாப்பிட என்ன செய்வது?" என்று கேட்டாள்.

"கவலைப்படாதே" என்ற பாவண்ணன் தன் நண்பன் மதியழகனுக்குப் பொருளுதவி கேட்டு மடல் எழுதினான்.

மதியழகனிடமும் அப்போது பணம் இல்லை. உடனே அவன் தன் இன்னொரு நண்பனான அறிவரசனுக்கு பொருளுதவி கேட்டு மடல் எழுதினான்.

அப்பொழுதுதான் அறிவரசனுக்குப் பாவண்ணனின் பணப்பை வந்து சேர்ந்தது. தன் நண்பனின் மடலைப் பார்த்ததும் அந்தப் பணப்பையைப் பிரிக்காமல் அப்படியே அனுப்பி வைத்தான், மதியழகன் அதை அப்படியே பாவண்ணனுக்கு அனுப்பினான்.

தான் அறிவரசனுக்கு அனுப்பிய பணப்பையே மதியழகனிடமிருந்து வந்திருப்பதைக் கண்டு வியப்பு அடைந்தான் பாவண்ணன். நேராக இருவர் வீட்டிற்கும் சென்று அவன் நடந்தது என்ன என்ற உண்மையைத் தெரிந்து கொண்டான்.

இறுதியாக அந்தப் பணப்பையிலிருந்த தொகையை மூவரும் சமமாகப் பிரித்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதையின் விழிப்புணர்வு நம்மிடம் இருக்கும்போதே மற்றவரிடம் அதை உணர முடியும்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புற்றுநோய் தரும் மரணங்களை தடுக்க வேண்டாமோ...

கொடிய புற்றுநோயால் தொடருகின்ற உயிரிழப்புக்கள் மனித வாழ்வையே வெறுக்க வைக்கும். அந்தளவுக்கு புற்றுநோய் மரணங்கள் மனித குலத்தை உலுக்கி வருகின்றன.

அதிலும் இளம் குடும்பப் பெண்கள் புற்றுநோய்க்கு ஆளாகி உயிரிழப்பதென்பது மிகவும் கொடுமையானது.

ஓர் இளம் தாயின் மரணத்தை ஒரு சாதாரண செய்தியாகக் கருதிவிட முடியாது.

ஆம், ஓர் இளம் தாயின் மரணம் பச்சிளம் பாலகர்களின் வாழ்வைப் பிழிந்து கசக்கி விடுகிறது. தாயின் அன்பை இழந்த அந்தக் குழந்தைகளைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் சாதாரண விடயமல்ல.

உண்மை. உலகில் எந்தக் கஷ்டங்களையும் துன்பங்களையும் மறந்து போகலாம். ஆனால் சிறுவயதில் தாயை இழந்த துயரத்தை ஒரு மனிதன் தன் மரணத்திலேயே மறக்க முடியும்.

அவ்வளவுக்கு மிகவும் வலியும் கொடுமையும் துயரமும் தரவல்ல தாயின் மரணத்தில் புற்றுநோயே முன்னிலை பெற்றுள்ளது.

ஆம், இலங்கையில் ஒரு நாளில் மட்டும் நூறு பேர் புற்றுநோயாளர்களாக இனங்காணப்படுகின்றனர் என்பதோடு நாளாந்தம் 40 பேர் புற்றுநோயால் மரணிக்கின்றனர் என்ற அதிர்ச்சித் தகவலை சுகாதாரப் பிரதி அமைச்சர் மருத்துவர் ஹம்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

புற்றுநோய்க்கான மருந்து கண்டறியப்பட்டுள்ளது என்ற தகவல்கள் வெறும் செய்திகளாகக் கடந்து செல்கின்ற நிலையில், நாளாந்தம் புற்றுநோயாளர்களாக 100 பேர் இனங்காணப்படுவதும் தினசரி 40 பேர் புற்றுநோயால் உயிரிழப்பதும் வெறும் செய்திகள் அல்ல. அந்தத் தகவல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் பல குடும்பங்கள் அழுகண்ணீருடன் வாழ்கின்றன.

இவ்வாறு புற்றுநோய்க்கு ஆளாகின்ற பரிதாபம் ஏன்? எதற்கு? எனும் கேள்வி தொடர்பில் எவருமே கருசனை கொள்வதாக இல்லை.

ஆம், கிருமிநாசினிகளின் அதீதப் பிரயோகம், செயற்கை உரங்களின் உச்சப் பயன்பாடு, பழவகைகள் மற்றும் மரக்கறிகள் என அனைத்துக்கும் விசிறப்படும் இரசாயன மருந்துகள், பொலித்தீன் பாவனைகள், பிளாஸ்ரிக் பொருட்களின் உபயோகங்கள், பழுதடைந்த உணவுகள், உணவுப் பொருட்களுக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் என எல்லாமும் சேர்ந்து புற்றுநோயைத் தந்து போகின்றன.

ஆயினும் அதுபற்றிய விழிப்புணர்வுகளும் தடுப்பு நடவடிக்கைகளும் போதுமானதாக இல்லை.

இதற்கும் மேலாக, பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை எரியூட்டுகின்ற கொடுமை சொல்லுந்தரமன்று.

ஆக, ஒட்டுமொத்தத்தில் மனித சமூகத்தின் பொறுப்பற்ற செயல்கள் புற்றுநோய் என்ற வடிவத்தில் அருமந்த மனித உயிர்களைக் காவு கொள்கின்றன.

எனவே புற்றுநோய் அபாயம் குறித்து அஞ்சுவதை விடுத்து, புற்றுநோயை ஏற்படுத்துகின்ற ஏதுக்களைத் தடுப்பதே அவசியமாகும்.

ஆகையால் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தி புற்றுநோயில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் பெரும் பணியை தீவிரப்படுத்த வேண்டும்.

# டித்வா பேரிடர் அழிவுகளைச் சீரமைக்க கடன் வாங்கவுமில்லை, பணம் அச்சிடவுமில்லை

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(நுவரெலியா)

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளைச் சீரமைக்கும் பணிகளுக்காக அரசாங்கம் ஒரு சதம் கூட கடன் வாங்கவில்லை எனவும் பணத்தை அச்சிடவில்லை எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்புக்கான ஒன்றிணைந்த தேசம் தேசிய வேலைத்திட்டத்தின் மத்திய மாகாண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில் அரசாங்கம் ஒரு வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான மறுசீரமைப்புப் பணிகளுக்காக அரசாங்கம் 500 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை ஒதுக்கியுள்ளது.

அரசாங்கத்தின் திறைசேரிக் கணக்கில் 1,200 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை காணப்பட்டது.

அதிலிருந்தே மறுசீரமைப்புப் பணிகளுக்காக 500 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களின் மதிப்பு 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 1.2 ரில்லியன் ரூபா) என உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 4 சதவீதமாகும்.

நாங்கள் நிதி ஒழுக்கத்தையும் பொருளாதாரக் கொள்கைகளையும் உருவாக்கியுள்ளோம். இதன் மூலம் டித்வா சூறாவளிக்குப் பின்னர் பின்னோக்கிச் செல்லாமல் முன்னோக்கி நகர முடிகிறது.

பொருளாதாரத்தில் பெரிய பாதிப்புகளின்றி இத்தகைய சேதங்களை எதிர்கொள்ளும் நிலையை நாம் உருவாக்கியுள்ளோம் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (ம-7)

### வியாவில் சைவ வித்தியாலய

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(காரைநகர்)

யாழ்ப்பாணம், காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தின் நிறுவுனர் தினமும் பரிசளிப்புவிழாவும் நாளை 13 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில், காரைநகர் திருநாவுக்கரசு நாயனார் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் திரு. கனகரத்தினம் துஷ்யந்தன் அவர்களின் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடப் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ள அதேவேளை, அவர்தம் பாரியாரும் வியாவில் சைவ வித்தியாலய முகாமையாளரின் பேர்த்தியுமான திருமதி சிவரூபி சர்வேஸ்வரன் அவர்கள் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

விழாவின் சிறப்பம்சமாக மானிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி பாடசாலை அதிபர் செல்வி மாணிக்கம் சாந்தினி அவர்கள் நிறுவுனர்நினைவுப்பேருரையை ஆற்றவுள்ளார். (ம-7)

## வேலணை மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரியின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிமுதல் கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் வி.இ.ஹஸ்ரன்றோய் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானசம்பந்தபிள்ளை ஞானசுந்தரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்(உடற்கல்வி) முத்தையா காந்தச்செல்வன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

### சிவராத்திரியை முன்னிட்டு

## திருக்கேதீஸ்வரத்திற்கு விசேட பேருந்து சேவை

(பருத்தித்துறை)

மஹா சிவராத்திரி நன்னாளில் திருக்கேதீஸ்வரப் பெருமானை தரிசிக்கச் செல்லும் பக்தர்களுக்காக பருத்தித்துறையில் இருந்து திருக்கேதீஸ்வரத்திற்கான விசேட பேருந்து சேவைகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையினரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 15 ஆம் திகதி விசேட பஸ் சேவைகள் பருத்தித்துறையில் இருந்து ஆரம்பமாகி நெல்லியடி கொடிகாமம் சாவகச்சேரி - பூநகரி ஊடாக திருக்கேதீஸ்வரம் சென்றடையவுள்ளது.

குறித்த சேவையானது பருத்தித்துறையில் இருந்து காலை 05.00 மணி, காலை 07.00 மணி, காலை 09.00 மணி, மாலை 03.00 மணி, மாலை 04.00 மணி ஆகிய நேரங்களில் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் தேவை ஏற்படின் பக்தர்களின் நலன் கருதி மேலதிக பஸ் சேவையும் ஏற்பாடு செய்யப்படும் என இ.போ.சபையின் பருத்தித்துறை சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ம-7,60)

### மன்னார் திருக்கேதீஸ்வர

## மஹா சிவராத்திரி தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல்

(மன்னார்)

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மஹா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை காலை 11 மணியளவில் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் சிவசம்பு ராமகிருஷ்ணன் கலந்துகொண்டதோடு எதிர்வரும் மஹா சிவராத்திரி விழாவிற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்துக் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப் பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், திணைக்கள தலைவர்கள், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள், அரச தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

20

என்.சொக்கன்

இத்தனை ஆபத்துகள் உண்டு என்று தெரிந்தும்கூட, அநேகமாக ஒவ்வொரு நாட்டிலும் ஏராள மானவர்கள் சிஐஏவின் ஒற்றர் களாகப் பணிபுரிய முன்வருகி றார்கள். இதற்கு முக்கியக் காரணம், அவர்கள் வாரி வழங்குகிற பணம் தான்.

தன்னுடைய ஒற்றர்களைப் பற்றிய தகவல்களை, சிஐஏ பரம இரகசியமாகப் பாதுகாக்கிறது. ஆரம்பத்திலேயே ஒவ்வொருவருக் கும் ஒரு இரகசிய எண், பெயர் (Code Number / Name) ஒதுக்கி விடுகிறார்கள். அதன்பிறகு, எந்த சிஐஏ ஆவணத்திலும், சம்பந்தப்பட்ட நபரின் நிஜப் பெயர் பயன்படுத்தப் படாது. எல்லாம் சங்கேதக்குறிப்பு களாகதான் எழுதிவைத்திருப் பார்கள்.

எந்த இரகசிய எண் அல்லது பெயர் நிஜத்தில் யாரைக் குறிக்கிறது என்பது பிரம்ம இரகசியம். யாராலும் அத்தனை சுலபத்தில் இந்தத் தகவலைத் தெரிந்து கொண்டு விடமுடியாது. ஏழு கடல், ஏழு மலை தாண்டி அதுவும் வெவ்வேறு இடங் களில் தனித்தனியே பிரித்து ஒளித்து வைத்து, அதன்மீது விஷப் பாம்பு களை நெளியவிட்டிருப்பார்கள்.

இப்படி ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான இரகசிய ஏஜென்ட் களைத் தேர்ந்தெடுக்கிறது சிஐஏ. இவர்களிடமிருந்து வரும் தகவல் களைத் திரட்டித் தொகுப்பதற்கும் பிரமாதமான ஒரு நெட்வொர்க் கட்டமைப்பை உருவாக்கியிருக் கிறார்கள்.

அந்தந்த நாட்டில் சேகரிக்கப்படும் தகவல்கள், முதலில் உள்ளூர் சிஐஏ "ஸ்டேஷன்" அலுவலகத்துக்குச் சென்று சேர்கின்றன. இவற்றைத் தொகுத்து தலைமை அலுவல கத்துக்கு அனுப்பவேண்டியது அவர் களுடைய பொறுப்பு.

ஆனால், வருகிற எல்லாத் தகவல்களையும், அப்படியே பொட் டலம் கட்டி அனுப்பிவிட முடியாது. அவற்றில் எது முக்கியம், எது முக்கியமில்லை என்று முதலில் பிரித்தாகவேண்டும்.

இதற்காக, சிஐஏ அதிகாரிகள் தங்களுடைய மேலிடத்துக்குச் செல்லும் அனைத்துத் தகவல் களையும் அவற்றின் முக்கியத் துவம் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கிறார்கள்- Flash, Immediate, Priority & Routine.

இவற்றில், Flash, Immediate ஆகிய இரண்டு வகைகளும் முக்கிய மான தகவல்கள். மற்ற இரண்டும் சுமார் ரகம். ஆனால், அவற்றையும் புறக்கணிப்பதற்கில்லை. துண்டு துக்கடாத் தகவல்களைக்கூட, மேலிட த்துக்குத் தவறாமல் அனுப்பிவைத் தாகவேண்டும்.

இப்படி உலகம்முழுவதிலும் இருந்து, சிஐஏவின் தலைமை அலுவ லகத்துக்குத் தகவல் அறிக்கைகள் வந்து குவிகின்றன.



அங்கே பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள், இந்தத் தகவல்களைத் திரட்டி, மதிப்பெண் போடுகிறார்கள்.

இந்தத் தகவல் நமக்கு நன்கு பயன்படக்கூடியது, ஆகவே 20 மார்க். இது சுமார்தான், மூன்று மார்க் கொடுத்தால் போதும். இது ஒன்றுக்கும் பயன்படாது, கோழி முட்டை - இப்படி ஒவ்வொரு தகவ லுக்கும் மார்க் தரப்படுகிறது.

வருடம்முழுவதும் இப்படித் தரப் படுகிற ஸ்கோர்களைக் கூட்டிப் பார்த்து ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் சராசரி மதிப்பெண்களைக் கணக்கிடு வார்கள். இதன் அடிப்படையில்தான், எந்த ஸ்டேஷன் எவ்வளவு திறமை யாக இயங்குகிறது என்பது தீர்மா னிக்கப்படும்.

ஒவ்வொரு நாளும் வரும் தகவல் களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த (அதாவது அதிக மதிப்பெண் வாங்கிய) விடயங்கள்மட்டும்தான், அதிபரின் பார்வைக்குச் செல்கிற PDB செய்தி அறிக்கையில் இடம்பெறு கிறது.

இதோடு, சிஐஏவின் அதிகார எல்லைகள் முடிவடைந்துவிடுகின் றன. அதன்பிறகு அந்தத் தகவல் களின் அடிப்படையில் என்ன செய் யலாம் என்று முடிவெடுக்கிற பொறுப்பு, அதிபர் மற்றும் செனட் சபையின் கையில்தான்.

சிஐஏவின் சரித்திரத்தில், பல முக்கியமான தகவல்களை அவர்கள் முன்கூட்டியே கண்டறியாமல் கோட்டைவிட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. இதற்கு நேரெதிராக அவர்கள் தகவல்களைச் சரியான நேரத்தில் கண்டறிந்து சொல்லியும், அதிபர், மற்ற அதிகாரிகள் அதைக் கண்டுகொள்ளாமல் சொதப்பிய தருணங்களும் உண்டு.

இதனால், அமெரிக்க அரசுகளால் சிஐஏவை முழுக்கப் புறக்கணிக்கவும் முடியாது. அதற்காக அவர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்தால் ஆபத்தாகிவிடும் என்றும் பயப்படு வார்கள். கடந்த அரை நூற்றாண்டு காலமாக, இந்த இரண்டு நேரெதிர்ச் சிந்தனைகளுக்கும் இடையில்தான் சிஐஏ வளர்ந்துவந்திருக்கிறது.

### 9. புதிய கூட்டணி

ரஷ்யாவில் போல்ஷ்விக் புரட்சி முடிவடைந்து சோவியத் யூனியன் உருவாகியிருந்த காலகட்டம்.

இந்தப் புதிய கூட்டமைப்புக்கான கொடியை வடிவமைக்கும் பொறுப்பு, ஓர் ஓவியரிடம் ஒப்படைக்கப்பட்டி ருந்தது. அவர் சுறுசுறுப்பாகச் செக்கச் செவேல் என்று ஒரு கொடியைத் தயாரித்து நடுவில் ஒரு வாள் வரைந் தார்.

லெனின் பார்வைக்கு இந்தக் கொடி சென்றபோது உடனடியாக அந்த வாளை நீக்கும்படி உத்தர விட்டார். ஏன் நீக்கவேண்டும்? வாள் என்பது வீரத்தின் சின்னம் இல்லையா? அதனால்தான் அதை நீக்க வேண்டும்"என்றார் லெனின், "நாடு பிடிக்கிறவர்களுக்குதான் வாள் தேவை. நாம் அதற்கு எதிரான வர்கள். இப்படி ஓர் உயர்ந்த கொள் கையின் அடிப்படையில் உருவான சோவியத் யூனியன், அடுத்தவர் களின் நிலப்பகுதிகளை ஆக்கிர மிப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்தது.

ஆனால் அரை நூற்றாண்டு காலத்துக்குப்பிறகு, அவர்களும் இன்னொரு தேசத்தின்மீது போர் தொடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. ஆப்கானிஸ் தான் யுத்தம். சுமார் பத்து வருட காலம் நீடித்த இந்தப் போரில், சோவியத் யூனியனுக்குக் கிடைத் தது கொஞ்சம், இழந்தது அதி கம்.

இப்படியொரு புண்ணிய காரி யத்தில், அமெரிக்கா பங்கேற்காமல் இருக்கமுடியுமா? அவர்கள் தங்க ளுடைய பிரதிநிதிகளாக சிஐஏவை அனுப்பிவைத்தார்கள். ஆப்கான் குட்டை மேலும் குழம்பியது.

அதைப்பற்றிப் பார்ப்பதற்குமுன், ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் நுழைய நேர்ந்த பின்ன ணித் தகவல்களைக் கொஞ்சம் சுருக்கமாகப் புரிந்து கொண்டு விடுவது அவசியம்.

ஆப்கானிஸ்தான் ஒரு முஸ்லீம் நாடு. சோவியத் யூனியன் ஒரு கம்யூனிஸ்ட் கூட்டமைப்பு. புவியியல் ரீதியில் இரண்டும் அருகருகே இருந்தாலும்கூட, மொழி, கலாசாரம் என்று பல விடயங்களில் இவர்கள் வேறுபட்டிருந்தார்கள்.

இந்தமாதிரியான சூழ்நிலை களில், அதிகம் பாதிக்கப்படுகிற வர்கள், இந்த இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளில் வாழ்கிறவர் கள்தான். சோவியத் யூனியனின் ஆப்கான் எல்லையில் வாழ்ந்த முஸ்லீம்களுக்கு, கம்யூனிஸ்ட் ஆட்சியின் சில கொள்கைகள் பிடிக்க வில்லை. சிறுபான்மையினர் என்கிற காரணத்தால் தாங்கள் ஒதுக்கப் படுகிறோம் என்று நினைத்தார்கள். தவிர கம்யூனிஸ்ட்கள் எல்லாம் கடவுளுக்கு விரோதமானவர்கள் என்பது அவர்களுடைய உறுதியான நம்பிக்கை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் ராணி...

இவ்வாறு உயிரிழந்தவர் வாளித் தொழிற்சாலை வீதி, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நடராசா செல்லத்துரை என்பவராவார்.

சடலம் சுன்னாகம் புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

## குமாரபுரம்...

திருகோணமலை கிளிவெட்டி, குமாரபுரம் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தலில் உயிரிழந்தவர்களுக்கு மலர்தூவி, சுடரேற்றி, அஞ்சலி செலுத்தப்பட்டது.

1996.02.11 அன்று இடம்பெற்ற குமாரபுரம் படுகொலையில், 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட 09 பிள்ளைகள், 09 பெண்கள் உட்பட 26 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். (ம-7,33)

## உ/த மாணவன்...

கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி பயிலும் அதே பகுதியைச் சேர்ந்த சசிகரன் யாழவன் (வயது-19) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தமது வீட்டுக்கு அருகாமையில் உள்ள பற்றைக் காட்டுக்குள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,84)

## திருகோணமலை...

குற்றச்சாட்டுகளின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தேரர்கள் உள்ளிட்ட 10 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்று (11) உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திருகோணமலை கடற்கரையில் கட்டப்பட்ட ஹோட்டலொன்றை கடலோர பாதுகாப்பு அதிகாரிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது கொழும்புப் பகுதியைச் சேர்ந்த குழுவினர் தலையிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உள்ளிட்ட குழுவினர் அந்த இடத்திற்கு புத்தர் சிலையை கொண்டு வந்ததுடன் பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்திற்குச் சென்ற போது அமைதியின்மை ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் குறித்த காணி ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி போதிராஜ விகாரைக்கு வழங்கப்பட்டதாக எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட 10 சந்தேகநபர்களையும் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு மீண்டும் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 10,000 ரூபாய் ரொக்கப் பிணை, தலா ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான 02 சரீரப் பிணைகளில் சந்தேகநபர்களை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் ஜூன் 17ஆம் திகதி மீண்டும் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ம-7)

## பொலிஸார்...

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஹயஸ் வாகனத்தை வவுனியாவில் உள்ள நபர் ஒருவரிடம் இருந்து தாம் புதிதாக கொள்வனவு செய்ததாகவும் கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் தமக்குச் சொந்தமான வயலில் நெல் அறுவடை செய்வதற்காக வேலணைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வேலையாட்களை ஒழுங்குபடுத்தித் தருவதாகக் கூறியதால், அவரை ஏற்றச் சென்ற வேளையே சம்பவம் இடம்பெற்றதாக கைதான இருவரும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உயிரிழந்த சிறுவனின் சிறிய தந்தை தான் முன்னதாக வாகனத்தை ஓடியதாகவும் தீவுப் பகுதியில் வீதியில் சிறுவன் தான் வாகனம் ஓட விரும்பிக் கேட்டபோது வாகனத்தை வழங்கிய நிலையில் வாகனத்தை ஓட்டிச் சென்ற வேளை அல்லைப்பிட்டிப் பகுதியில் பொலிஸார் மறித்த போது வாகனத்தை நிறுத்தாது தொடர்ந்து செலுத்தினார்.

அவ்வேளை மண்டைதீவு பொலிஸ் காவலரணில் நின்ற பொலிஸார் வாகனத்தை மறிக்கத் தயாராக இருந்த வேளை மீண்டும் வாகனத்தை அல்லைப்பிட்டிப் பக்கம் நோக்கித் திருப்பிய வேளை எம்மைப் பின் தொடர்ந்து வந்த பொலிஸார் எமது வாகனத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினார்கள்.

ஒரே ஒரு துப்பாக்கிச் சூட்டு சத்தம் மாத்திரமே எமக்குக் கேட்டது. அதன் போதே பெறாமகன் வீதியோரமாக வாகனத்தை நிறுத்தி மயங்கிச் சரிந்தார்.

பின்னர் பொலிஸார் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதுடன், எம்மைக் கைது செய்து பொலிஸ் நிலையம்கொண்டு சென்றுவிட்டனர்.

வாகனத்தில் இருந்த சாணகம், கயிறு, வாள், வாகனத்தில்விழுந்துள்ள துப்பாக்கி சூடுகள் பற்றி எவையும் எமக்குத்தெரியாது என தெரிவித்துள்ளனர். (ம-7,33)

## சிறு...

படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி எம்.மயூரதன் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளமையை உறுதிப்படுத்தும் நோக்கில், உயிரிழந்த சிறுவனின் இரத்த மாதிரிகள், அரச இரசாயன பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிறுவனின் சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின்போது, நெற்றி வழியாக, மூளைப் பகுதிக்கு துப்பாக்கித் தோட்டா பாய்ந்துள்ளமை தெரியவந்துள்ளதாக சட்ட மருத்துவ அதிகாரி கூறியுள்ளார்.

எனினும் குறித்த துப்பாக்கிச்சூடு அருகிலிருந்து மேற்கொள்ளப்பட்டமைக்கான காயம் அல்ல எனவும், குறிப்பிட்ட அளவு தொலைவில் இருந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சட்ட மருத்துவ அதிகாரி எம்.மயூரதன் தெரிவித்துள்ளார். (ம-7)

## தேயிலைத்...

நுவரெலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நானுஓயா - ரதல்ல குறுக்கு வீதியில் உள்ள தேயிலைத் தோட்டமொன்றுக்குச் சென்று தொழிலாளர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். (ம-7)






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு

**076 315 6470** (C-4983)

ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna.



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4984)

**076 825 7716** (ஆகாஸ்)


# மாதாந்தம் மருந்துகள் மீளாய்வு

(மாத்தறை)

வைத்தியசாலைகளில் தொடர்ச்சியான மருந்து விநியோகத்தைப் பேணுவதற்காக, ஒவ்வொரு வைத்தியசாலையிலும் மாதத்திற்கு ஒரு முறை மருந்துகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதாரப் பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையில் கண்காணிப்பு விஜயமொன்றில் ஈடுபட்டிருந்த போதே பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். (ம-7)


## மணப்பெண் தேவை

1. சுன்னாகம், இந்து, 1993, அனுசம், MBA, UK Electronic Engineering Moratuva University மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57017).
2. மாதகல், இந்து, 1991, பரணி, Engineering (UK), Managment officer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(53670)
3. அச்சுவேலி - புத்தூர், இந்து, 1986, பூரட்டாதி, B.Eng electrical and Electonic (ICBT), Electrical Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51945)
4. உடுவில், இந்து, 1993, பூரம், B.Eng (Hons) in Civil and Structural, Project Engineer, Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52945)
5. யாழ்., Roman Catholic, 1980, BBM, Manager, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை (57444)
6. யாழ். Town, இந்து, 1994, திருவோணம், BSc in Mechanical Engineering, MSc (Canda), Mechanical Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54640).
7. பருத்தித்துறை, இந்து, 1981, கேட்டை, BSc in Network Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (53849).
8. தெல்லிப்பழை, இந்து, 1996, சித்திரை, Master of Business Management, Government Job, Newzealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36133).
9. யாழ்.Town, இந்து, 1991, உத்தரம், CIMA fully qualified, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(29780)
10. உடுப்பிட்டி, இந்து, 1995, மகம், Bechelor of Business Management, Banker மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56018)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (6815)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 074 387 3686



## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் வகுப்பு மேற்பார்வையாளர், கிளார்க் தேவை.

தொடர்பு கொள்ளும் நேரம் :
காலை 7.00 am - மாலை 5.00 pm

**075 896 0575** (C-4982)



## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் | Gastrtis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால் ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (6814)



## உடனடி விற்பனைக்கு

வெள்ளவத்தை ரோகினி றோட்டில் 4 படுக்கைஅறைகள், 3 குளியல் அறைகளுடன் கூடிய டுப்ளிக்கன் அப்பாட்மெண்ட் வீடு உடனடி விற்பனைக்குண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு
**071 727 3168, 076 687 6275** (6809)




## விற்பனையாளர் தேவை (பெண்)

யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியில் இயங்கும் புடவை நிறுவனத்துக்கு வியாபார அனுபவம் உள்ள அல்லது தொழில் பழக ஆர்வமுள்ள பெண் விற்பனையாளர் தேவை.
மதிய உணவுடன் கூடிய சம்பளம். (6816)

**077 667 0046**


## மரண அறிவித்தல்

பிறப்பு 14 - 01 - 1950



இறப்பு 10 - 02 - 2026

### கனகசபாபதி தர்மநாயகம்
### (அகில இலங்கை சமாதான நீதவான் JP)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி தர்மநாயகம் அவர்கள் கடந்த (10.02.2026) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் செல்வரத்தினம் (சுந்தரப்பா) - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூ அவர்களின் அன்புக் கணவரும் துஷ்யந்தி (லண்டன்), துசாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுதேசன், சிந்துஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிரன், மீனாட்சி, வருணிகா, விஷாகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கனகநாயகம் (ஓய்வு பெற்ற கிராம சேவகர்), காலஞ்சென்ற ஸ்ரீகந்த நாயகம் (வங்கி முகாமையாளர்) மற்றும் ஜெயகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல் : குடும்பத்தினர்
[illegible]

(6817)


## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர்/ பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர்

தங்குமிடம், உணவு வழங்கப்படும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(அனுபவத்திற்கேற்ப உரிய சம்பளம் வழங்கப்படும்) (C-4985)

தொடர்பு : **077 219 0128**



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## வீடு வாடகைக்கு உண்டு

ஊரெழுப் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
**074 315 3557** (6812)




## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் முல்லைத்தீவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (2041)

**076 889 1308**
**077 606 1333**


## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் [illegible]
மறைவு 25.01.2025

அமரர்
### திருநாவுக்கரசு மங்களநாயகி

திதி: அபரபக்க ஏகாதசி (12.02.2026)

சித்தமெல்லாம் நிறைந்த அணையாத தீபமாம்
எங்கள் ஆருயிர் அம்மா!
வீடடைந்து இறைதாளில் நீடித்து
ஓராண்டு பூர்த்தியாகும் இந்நாளில்
தெய்வமாய் எமக்குள் வீற்றிருந்து
எமை வழி நடத்திச் செல்லும்
எம் தாயை, அன்புடன் நினைவு கூர்ந்து
உளமார வணங்குகின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.